# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

**முறையீட்டு மனு எண். 113/2018**
**ஆணை நாள். 20–09–2018**

**முறைமன்ற நடுவ 15.05.2018 விசாரணையின்போது கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அளித்த வாக்குமூலம் மற்றும் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின்30.04.2018 நாளிட்ட கடித நகல்.** --இம்முமைன்ற நடுவம் தாமாகவே முன்வந்து வழக்காக பதிவு செய்தது.

**1.முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,**
**கண்ணம்பாளையம் பேரூராட்சி,**
**கோவை மாவட்டம்.**
**2.பேரூராட்சி செயல் அலுவலர்,**
**மற்றும் தொடர்புடைய பணியாளர்கள்,**
**கண்ணம்பாளையம் பேரூராட்சி,**
**கோவை மாவட்டம்.** -- எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரது, கோவை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு முகவரியிட்ட கடித ந.க.எண். 03/2018, நாள் 30.04.2018ன் நகல் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்திற்கு மின்னஞ்சல் மூலம் 16.05.2018ல் வரப்பெற்றது. மேற்படி கடிதத்தில் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 5–வது வார்டு, கோட்டங்கள் பகுதியில் க.ச.எண்.373/1ல், 3 ஏக்கர் பரப்பளவு கொண்ட புன்செய் நிலத்தில் திரு.கே.சி.சுப்பிரமணியம் அன்ட் பிரதர்ஸ் என்பவருக்கு சொந்தமான 2,000 சதுர அடி (ஆர்.சி.சி.கட்டிடம்) மற்றும் தொழிற்சாலை 20,000 சதுர அடியில் (சிமெண்ட் ஷீட் கட்டிடம்) கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், 20,000 சதுர அடி கொண்ட கட்டிடத்திற்கு உள்ளூர் திட்டக் குழுமத்தின் அனுமதி பெற்றிருக்கவேண்டுமெனவும், ஆனால் முன்னாள் கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்றத் தலைவர், தனது தலைவர் பதவியின் அதிகாரத்தினை

துஷ்பிரயோகம் செய்தும், தலைவருக்கான கடமையினை செய்யாமல் பதவியினை பயன்படுத்தி 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட கட்டிட விதிகளை பின்பற்றாமல் முறைகேடாக கட்டிடம் கட்டவும் வரி விதிப்பு செய்யவும் அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள விவரத்தினை 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(i) ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து வழக்காக பதிவு செய்து நடவடிக்கைகள் தொடரப்பட்டன.

மேற்படி விளக்கங்களின் அடிப்படையில், இப்பொருள் தொடர்பான அசல் கோப்பு மற்றும் அப்போதைய செயல் அலுவலர்களின் விவரங்களை சமர்ப்பிக்கத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவ 25.05.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

அதனடிப்படையில் வரப்பெற்ற கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, மற்றும் ஆவண நகல்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. அதன்படி மேற்படி கண்ணம்பாளையம் பேரூராட்சி, வார்டு எண்.5ல் கட்டிட அனுமதி மற்றும் சொத்து வரி விதிப்பு நிர்ணயிக்கலில் விதி மீறல்கள் மற்றும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது கீழ்க்கண்டவாறு உறுதியாகிறது.

கோவை மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.03/2018, நாள்.30.04.2018ல் – (கோயம்புத்தூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு முகவரியிட்டது) கண்ணம்பாளையம் பேரூராட்சியில், க.ச.எண்.373/1ல் விதிகளுக்கு முரணாக அனுமதி ஏதும் பெறப்படாமல் 20,000 சதுர அடி கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதெனவும், வரி விதிப்பிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், மேற்படி முறைகேடுகள் கண்ணம்பாளையம் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.தளபதி முருகேஷ் என்பவர் தனது தலைவர் பதவியை துஷ்பிரயோகம் செய்துள்ளதால் நடைபெற்றுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் இதன் பொருட்டு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கோவை மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கை ந.க.எண்.03/2018 நாள்.30.07.2018ல் [illegible] மேற்படி இடத்தில் 20,000 சதுர அடியில் கட்டப்பட்ட கட்டிடம் இருந்து வருவதாகவும், ஆனால் 5,973 சதுர அடிக்கு மட்டுமே 2005–06ம் ஆண்டில் கட்டிட உரிமம் பெறப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 14,027 சதுர அடி உள்ள கட்டிடத்திற்கு அனுமதி பெறப்படவில்லை எனவும் இதன் மூலம் நாளது தேதி வரை சொத்து வரி உட்பட பேரூராட்சிக்கு ரூ.10,56,846/– இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தற்போது மேற்படி கட்டிடம் குறித்து காவல் துறையின் விசாரணை வரம்பிற்குட்பட்டு இருந்து வருவதாகவும், மேலும் கண்ணம்பாளையம் பேரூராட்சியில் உள்ள கட்டிடங்களுக்கு வருடாந்திர பராமரிப்புத் தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின்படி கோவை மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சியில் விதிகளை மீறிய மற்றும் முறைகேடான கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதும், இவ்வினங்களில் முன்னாள் பேரூராட்சித் தலைவர் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்துள்ளதும் உறுதியாகிறது. இது போன்ற விதி மீறிய, அனுமதி பெறப்படாத கட்டுமானங்கள் குறித்து கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல்

அலுவலரால் எந்தவிதமான சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலை கண்டனத்துக்குரியதாகும். மேலும் இத்தகைய விதிகளுக்கு புறம்பான செயல்பாடுகளில் முன்னாள் பேரூராட்சித் தலைவர் மட்டுமின்றி சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்களின் ஈடுபாடு குறித்தும் விசாரரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், ஏற்கனவே இப்பொருள் தொடர்பான விசாரணை, உள்ளூர் காவல் துறையின் நடவடிக்கையில் உள்ளதால், இது தொடர்பாக உரிய புலன் விசாரணை மாவட்ட குற்றப் புலனாய்வுத்துறை மூலம் மேற்கொண்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

எனவே மேற்படி பொருள் தொடர்பாக உரிய புலன் விசாரணைகள் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு கோயம்புத்தூர் மாவட்ட குற்றப்புலனாய்வுத் துறைக்கு,2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 11 ன் கீழ் சுட்டி அனுப்பப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 17/10/2018

17/10/18

17/10/18

1.காவல்துறை கண்காணிப்பாளர்,
மாவட்டக் குற்றப்புலனாய்வுத் துறை,
கோவை மாவட்டம்,
கோயம்புத்தூர்.
2.செயல் அலுவலர்,
கண்ணம்பாளையம் பேரூராட்சி,
கோவை மாவட்டம் – 642 129.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோவை மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.